| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **89/2018** |
| **தேதி** | **:** | **02.07.2025** |
| **பெயர்** | **:** | **பாஸ்கரன் த/பெ பழனிபடையாட்சி** |

வா.த.சா.1. /(PW1) திரு. பாஸ்கரன் த/பெ பழனிபடையாட்சி என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

**<u>வா.த.சா.1 (PW1) சாட்சி மீண்டும் அழைத்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

1) இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் நிறுவனத்தில் இருந்து எனக்கு வழங்கப்பட்ட பணி நீக்க உத்தரவு ரத்து செய்து மீண்டும் பணி வழங்க உத்தரவு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆங்கிலம் எனக்கு படிக்க, எழுத தெரியுமா என்றால் தெரியும். தாவாவில் என்னை பணி நீக்க உத்தரவினை ரத்து செய்யக்கோரியும், மீண்டும் பணி வழங்க கோரி உத்தரவு கோரப்பட்டுள்ளதா என்று தாவா பிராதை காட்டி கேட்கப்பட்டுது. சாட்சி அதை பார்த்து எனக்கு வழங்கப்பட்ட பணி நீக்க உத்தரவை செல்லாது என்று கோரி உத்தரவு உள்ளது என்று சாட்சியம் அளித்தார். என்னை மீண்டும் பணி அமரத்த கோரி தாவாவில் பரிகாரம் இல்லை என்றால் சரிதான்.

2) பிரதிவாதி நிறுவனத்திற்கு பணிக்கு வருவதற்கு முன்பு நான் வேறு எங்கையாவது பணி செய்தேனா என்றால் MACON Engineers என்ற நிறுவனத்தில் சீனியர் இன்ஜினியராக பணி செய்து வந்தேன். என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்த 1 முதல் 12 பத்திகளில் தெரிவிக்கப்பட்ட சங்கதிகள் இவ்வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரிதான். அந்த விவரங்கள் என்னை பற்றி தகவல் தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக தெரிவிக்கப்பட்டதாகும்.

3) பிரதிவாதி நிறுவனத்தில் நான் எந்த தேதியில் பணியில் சேர்ந்தேன் என்றால் 18.08.1999 ம் தேதி நான் பிரதிவாதி நிறுவனத்தில் பணிக்கு சேரந்தேன். நான்

வேலைக்கு சேர்க்கப்பட்டதற்கான பணி உத்தரவு கடிதம் வழங்கப்பட்டதா என்றால் கடிதம் வழங்கப்பட்டது. அந்த உத்தரவு நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்தில் என்ன வேலைக்காக பணியமர்த்தப்பட்டது என்றால் சீனியர் இன் ஜீனியர், டெக்னிக்கல் சர்வீஸ் குரூப் என்ற குழுவில் என்னை பணியமர்த்தினார்கள். என்னை பணி பிரதிவாதி நினத்தில் சேர்க்கும்போதே சீனியர் இன்ஜினியராக பணி அமர்த்தப்பட்டது என்றால் சரிதான்.

4) பிரதிவாதி நிறுவனத்தில் எனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதா என்றால் 2002 ம் ஆண்டு உதவி மேலாளராக அதே குழுவில் எனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. மீண்டும் எனக்கு எப்போது பதவி உயர்வு வழங்கப்பட்டது என்றால் 2006 ம் ஆண்டு மேலாளராக அதே குழுவில் எனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. எனக்கு பதவி உயர்வு வழங்கிய உத்தரவு நகல்களை இந்நீதிமன்த்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2008 ம் ஆண்டு மீண்டும் எனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதா என்றால் முதுநிலை மேலாளராக அதே துறையில் எனக்கு பதிவு உயர்வு வழங்கப்பட்டது.

5) 2006 ம் ஆண்டு மேலாளராக பணியில் இருந்து 2008 ம் ஆண்டு முதுநிலை மேலாளராக பிரதிவாதி நிறுவனத்தால் எனக்கு பதிவி உயர்வு வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்தில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வு வழங்கப்படும் என்றால் வேலை செய்யும் விதத்தை பார்த்து தான் பதிவு உயர்வு வழங்கப்படும். எனக்கு வேலை முடிக்க வேண்டிய இலக்கை நிர்ணயித்து அதன் அடிப்படையில் தான் பணி உயர்வு வழங்கப்படும் என்றால் சரிதான். பணி உயர்வுக்கான வேலை செய்ததை எப்படி கணக்கிடுவார்கள் என்றால் ஒவ்வொரு ஆண்டும் அப்ரைசர்ஸ் பார்ம் எச்ஆர் டிப்பார்ட்மென்டில் இருந்து நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

6) 2011 ம் ஆண்டு எனக்கு மீண்டும் பதவி உயர்வு வழங்கப்பட்டதா என்றால் சரிதான். என்ன பதிவு உயர்வு வழங்கப்பட்டது என்றால் துணை பொது மேலாளராக (Deputy General Manager, Technical Service Group) பதவி உயர்வு வழங்கப்பட்டது. துணை பொது மேலாளராக எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் 2011 முதல் 2013 வரை அதே துறையிலும், 2013 முதல் 2016 வரை வேறு துறையிலும் நான் துணை பொது மேலாளராக பணிபுரிந்தேன். வேறு எந்த துறை என்றால் Environmental and Safety

Department ல் 2013 ல் உருவாக்கப்பட்டது. அதில் 2016 ம் ஆண்டு வரை நான் பணி புரிந்தேன். 2016 ம் ஆண்டு அதே துறையில் பொது மேலாளராக எனக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. 2013 மற்றும் 2016 ம் ஆண்டு வழங்கப்பட்ட பணி உயர்வுக்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) 2016 ம் ஆண்டு முதல் எத்தனை ஆண்டுகள் நான் பொது மேலாளராக பணி புரிந்து வந்தேன் என்றால் 2017 ம் ஆண்டு வரை நான் பொது மேலாளராக பணியில் இருந்தேன். அப்போது தான் என்னை சட்டத்திற்கு புறம்பாக பதவி நீக்கம் செய்தார்கள். பிரதிவாதி நிறுவனத்தில் என்னை பணி நீக்கம் செய்த உத்தரவு நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவீல்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது எந்த தேதி என்றால் 18.12.2017 ம் தேதியிட்ட கடிதம் 21.12.2017ம் தேதி பிரதிவாதி நிறுவனத்தால் தபால் மூலம் அனுப்பப்பட்டது.

8) பணியிடை நீக்கம் எப்போது செய்யப்பட்டது என்றால் 01.08.2017 ம் தேதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டது. எத்தனை நாட்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டது என்றால் 15 நாட்கள் ஆகும். என்ன காரணத்திற்காக பிரதிவாதி நிறுவனம் என்னை பணியிடை நீக்கம் செய்யப்பட்டது என்றால் புதியதாக உருவாக்கப்பட்ட துறையில் மோசடி நடந்துள்ளதாக என் மீது புகார் வந்திருப்பதாக தெரிவித்து என்னை பணியிடை நீக்கம் செய்தார்கள். ஆனால் அந்த புகார் என்னிடம் வழங்கப்படவில்லை. புகாரை யார் கொடுத்தார்கள் என்ற விவரமும், என்ன புகார் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

9) பணியிடை நீக்க உத்தரவை எதிர்த்து நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் 15 நாட்களுக்கு அனுப்பவில்லை. அதன் பின்னர் 14 நாட்கள் கழித்து என்னுடைய பணியிடை நீக்க உத்தரவை நீட்டித்து ஒரு கடிதம் 16.08.2017 ம் தேதி வந்தது. அதன் பின்னர் நான் மறுப்பு தெரிவித்து கடிதம் 17.08.2019 ம் தேதி அனுப்பினேன். அந்த கடிதம் யார் யாருக்கு அனுப்பினேன் என்றால் எச்ஆர் டிபார்ட்மென்ட், திரு. சாரதி (நிறுவனத்தின் எத்திக்ஸ் கமிட்டியில் இருப்பவர்), CEO, Managing Director ஆகியோருக்கு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை.

10) மேற்படி கடிதங்கள் அனைத்தும் நான் அனுப்பிய நபர்களின் பெயர் மற்றும் அவர்கள் வகித்த பதிவு குறிப்பிட்டு அனுப்பபட்டது என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் என்னுடைய இருப்பிட முகவரி குறிப்பிட்டு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

**சாட்சி கையொப்பம் - Sd/. பாஸ்கரன்.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/.M. Kalimuthuvel,
District Munsif,
Sriperumbudur.